**ஹிக்கடுவ நகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 19 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹிக்கடுவ நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியின் கீழ் ரூபா 98,434 தொகைக்கான மூலதன அல்லாத 41 விடயங்களை மூலதனப்படுத்தப்பட்டிருந்தன. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 937,756 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 22,037,338 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பதிவேடுகளை சரி செய்து கணக்குகளை சரி செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் ரூபா 499,928 தொகையினை மூலதனப்படுத்தியிருக்காதமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுதொகை கணக்கு மீதி அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 3,988,738 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வித்தியாசம் தொடர்பாக கண்டறிந்து 2020 கணக்குகளில் சரி செய்வேன். |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **பெறவேண்டிய கணக்கு** | | |
| (i) | முன்னைய காலப்பகுதி தொடர்பாக பெறவேண்டிய மூலதன உதவி ரூபா 1,942,643 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். | பதிவேடுகளை பரிசோதனை செய்த பின்னர் சரி செய்வேன். |
| (ii) | முற்பணப் பதிவேட்டுடின் படி 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 142,665 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். | பதிவேடுகளை பரிசோதனை செய்த பின்னர் சரி செய்வேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| | | |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 656,337 தொகைக்கான நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோரினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும். | நீண்ட காலம் முதல் காணப்படும் சிக்கல்களை எதிர்காலத்தில் சரி செய்வேன். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 112,157,880 தொகைக்கான 07 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) பாராளுமன்றச் சட்டங்கள் | | | |
| நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் அதிகாரம் 255 பிரிவு 170(1) | வீதவரி செலுத்தாத வரி செலுத்துவோர் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | 2012 ஆண்டு வழங்கப்பட்டிருந்த ரூபா 215,217 தொகைக்கான முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | பதிவேடுகளை பரிசோதனை செய்து உரிய நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 1,735,452 தொகைக்கான 255 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | பதிவேடுகளை பரிசோதனை செய்து உரிய நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) நிதிப்பிரமாணம் 1645 | வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். | சாரதியினரை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தாமதம் இன்றி சமர்பிப்பேன். |
| (இ) பொது நிருவாக சுற்றறிக்கைகள் | | | |
| (i) 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கை | ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 03 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவு 3.1 | சபைக்குச் சொந்தமான 23 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 5,064,629 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 2,993,582 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 18,000,000 | 19,591,873 | 14,778,056 | 33,460,151 | 26,050,000 | 24,668,963 | 22,379,637 | 28,646,834 |
| வாடகை | 3,400,000 | 3,387,490 | 3,705,362 | 4,420,126 | 7,036,000 | 6,927,690 | 6,900,143 | 4,737,998 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 956,000 | 639,610 | 730,174 | 272,180 | 1,846,000 | 1,107,260 | 1,243,830 | 362,744 |
| | 22,356,000 | 23,618,973 | 19,213,592 | 38,152,457 | 34,932,000 | 32,703,913 | 30,523,610 | 33,747,576 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 10,000 ற்கு மிகையான நிலுவைகள் காணப்படும் 183 வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 15,014,791 தொகையாக காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தரப்பினருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், நடமாடும் சேவை மற்றும் வருமான பரிசோதகர் மூலம் நிலுவை தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 244,078 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 57,487,618 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய தரப்பினரை அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டுள்ள துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

#### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான குப்பை முகாமைத்துவத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. | குப்பை அகற்றுவது தொடர்பாக முறையான நீண்ட காலத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் புதிய செயற்திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட சிக்கல்கள் தீர்க்கப்படும் என அறிவிக்கின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சம்பளமற்ற விடுமுறைக்காக சுகாதார தொழிலாளர் 04 பேரிடம் 03 வருடங்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 48,297 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட அறவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடப்படும் என அறிவிக்கின்றேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் படி 31 வெற்றிடங்கள் 62 மிகைகள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடிதங்களின் மூலம் குறிப்பிட்ட பிரிவுகளை அறிவுறுத்தியுள்ள போதிலும், தேர்தல் காரணமாக ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| (ii) 25/2014 முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு முரணாக அமைய மற்றும் பிரதியீட்டு ஊழியர்கள் 59 பேர் சேரக்கப்பட்டு 2019 ஆண்டின் போது சம்பளமாக ரூபா 14,154,321 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| (i) சபையில் அமைய மற்றும் பிரதியீட்டு ஊழியர்கள் 11 பேர் 12 வருடங்களுக்கு முன்னர் பெற்றிருந்த ஊளியர் கடன் முற்பணம் ரூபா 40,400 தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடப்பட வேண்டும். | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், நிலுவை கடனை அறவீடு செய்வற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) ஓய்வு பெற்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 04 ஊழியர்களிடம் ஊழியர் கடன் ரூபா 56,202 தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடப்பட வேண்டும். | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், நிலுவை கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) ஓட்ட நிலையில் காணப்பட்ட ரூபா 3,000,000 ற்கான பெறுமதியுடைய சாக்கடை பவுஸர் பதிவு செய்யப்பட்டிருக்காமையால், 2013 ஆண்டின் பின்பு ஓட்டப்பட்டிருக்கவில்லை. | பதிவு செய்யப்பட்டு ஓட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | பாதைகள் குறுகியதாக இருந்ததால் ஓட்ட முடியாமையால் வாகன செயற்களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஓட்டுவதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ii) 2005 ஆண்டின் போது ரூபா 300 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பொதுச் சந்தைக் கட்டடத்தின் மேல் மாடியில் 17 கடையறைகள் விளைவற்று காணப்பட்டது. | கட்டடத்தின் கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக் கூட்டத்தில் இது தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

### 3.5 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நகர சபையினால் ரூபா 2,806,378 தொகைக்கான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் அந்தக் கொள்வனவு தொடர்பாக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் வேறு கடமைகள் மேற்கொள்வதன் காரணமாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள முடியாமல் போனது என அறவிக்கின்றேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமைகளின் காரணமாக அவ்வலுவல்கள் தாமதமாகின என அறிவிக்கின்றேன். |